உத்தேச பங்கிலாபம்		(3,328,695.84)	-
		120,240,027.16	**120,628.953.23**

பக்கம் 07 மற்றும் 09 இல் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் பக்கம் 10 முதல் 20 வரை உள்ள குறிப்புகள் இந்த நிதிநிலை அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும். இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலைகளுக்கு இணங்க இந்த நிதிநிலை அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் சமர்ப்பிப்பதற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாகும். இந்த நிதிநிலை அறிக்கைகள் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கையொப்பமிடப்பட்டுள்ளன.

லங்கிகா வீரசிங்க
கணக்காளர் நாயகம்

எச்.கே.கே.ஏ.ஜயசுந்தர
தொழில் ஆணையாளர்

பீ.எச்.சீ.சிரோமலி
பணிப்பாளர் நாயகம்

எஸ்.எம்.பியதிஸ்ஸ
தலைவர்

3.3 காசுப் பாய்ச்சல் கூற்று

	குறிப்பு	2024 ரூபா.	2023 ரூபா.
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்			
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து மிகை / (பற்றாக்குறை)		1,883,011.54	11,095,652.81
சீராக்கம்			
தேய்மானம்	10	4,076,130.56	4,153,176.82
நிலையான வைப்புகளிலிருந்து முதலீட்டு வருமானம்	21	(9,894,212.19)	(17,833,167.86)
பிடிபண வரி	9.1	639,940.60	876,697.53
பதிவழித்தல்கள்	11.1	22,410.34	34,478.26
ஓய்வூதிய நலன்கள்	22	976,987.50	161,515.00
செயற்பாட்டு மூலதன கட்டணங்களுக்கு முன் செயல்பாட்டு லாபம்		(2,295,731.65)	(1,511,647.44)
செயற்பாட்டு மூலதனத்தின் மிகை / (பற்றாக்குறை)			
இடர் கடன் (அதிகரிப்பு) / குறைப்பு		(500,000.00)	
இருப்பு (அதிகரிப்பு) / குறைப்பு	14	(865,483.78)	60,848.94
கிடைக்க வேண்டியவை (அதிகரிப்பு) / குறைப்பு	20	(2,637,816.29)	(1,368,060.88)
பண முற்பணங்களில் (அதிகரிப்பு) / குறைப்பு	17	3,528,988.00	2,048,512.00
செலுத்த வேண்டியவை (அதிகரிப்பு) / குறைப்பு	18	4,795,719.21	3,093,506.92
முந்தைய ஆண்டுகளில் சீரமைப்புகள்	19	1,056,258.23	(78,648.24)
தொழிற்பாடுகளிலிருந்து உழைக்கப்பட்ட வருமானம்		3,081,933.72	2,244,511.30
ஊழியர் ஓய்வூதிய நலன்கள்		(167,335.00)	-
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்கள்		2,914,598.72	2,244,511.30
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல்			
சொத்து, இயந்திரங்கள் மற்றும் பொருட்களை அகற்றுவதில் இழப்பு		(3,075,503.76)	(278,449.76)
சொத்து, இயந்திரங்கள் மற்றும் பொருட்களை அகற்றுவதில் இழப்பு		4,700.00	
நிலையான வைப்பு முதலீடு		-	(3,000,000.00)
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல்		(3,070,803.76)	(3,278,449.76)
நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசு பாய்ச்சல்			
திறைசேரி மானியம் மூலதனம்		-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு பாய்ச்சல்		-	-
காசு மற்றும் காசுக்கு சமமானவை நிகர (அதிகரிப்பு) / குறைப்பு		(156,205.04)	(1,033,938.46)
ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவை	16	998,808.52	2,032,746.98
ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவை	16	842,603.48	998,808.52

குறிப்பு 4	2024	2023
வருமானம்	ரூபா.	ரூபா.
டிப்ளோமா கற்கைநெறி	21,326,830.00	22,303,260.54
சான்றிதழ் கற்கைநெறி	26,236,425.00	11,457,525.00
ஒரு நாள் நிகழ்ச்சிகள்	3,936,650.00	2,325,000.00
இரண்டு நாள் நிகழ்ச்சிகள்	1,169,925.00	1,340,000.00
மூன்று நாள் நிகழ்ச்சிகள்	720,000.00	495,000.00
விஷேட நிகழ்ச்சிகள்	4,084,875.00	2,545,704.81
பரீட்சை வருமானம்	6,180,383.25	7,066,842.76
பயிற்சி பட்டறைகள்	260,000.00	-
நிலையான வைப்பிலிருந்தான வட்டி	9,894,212.19	17,833,167.86
வேறு வருமானம்	3,118,009.39	852,010.00
சுனிசி வேலைத்திட்டம்/ப.தொ.அ.	1,337,069.00	961,490.00
மொத்தம்	**78,264,378.83**	**67,180,000.97**

குறிப்பு 5	2024	2023
தனி ஆளுக்குரிய வேதனாதிகள்	ரூபா.	ரூபா.
பதவியணி சம்பளம்	9,751,356.18	7,910,680.59
இரண்டாம் நிலை சம்பளம்	4,225,987.51	2,660,523.54
இரண்டாம் நிலை கொடுப்பனவுகள்	436,643.25	250,912.81
ஓய்வூதிய நிதி பங்களிப்பு	462,487.39	268,599.06
தலைவருக்கான கொடுப்பனவு	186,436.25	225,000.00
பயிற்சி கொடுப்பனவுகள்	1,078,700.00	817,000.00
ஊ.சே.நி. பங்களிப்பு	1,149,971.40	939,339.67
ஊ.சே.நி. பங்களிப்பு	287,492.86	234,834.93
விடுமுறை நாள் சம்பளம்	327,202.50	169,748.50
பதவியணியாளர்களின் மேலதிக நேர கொடுப்பனவு	1,035,867.57	801,073.67
வேறு கொடுப்பனவுகள்	559,709.59	325,000.00
ஓய்வூதிய நலன்	976,987.50	161,515.00
அக்ரஹாரா	138,000.00	-
மொத்தம்	**20,616,842.00**	**14,764,227.77**

குறிப்பு 6	2024	2023
பயணச் செலவுகள்	ரூபா.	ரூபா.
உள்நாட்டு	64,400.00	43,012.50
வெளிநாட்டு	429,342.34	447,504.55
மொத்தம்	**493,742.34**	**490,517.05**

குறிப்பு 7	2024	2023
வழங்கல் மற்றும் நுகர்பொருட்கள்	ரூபா.	ரூபா.
அச்சிடுதல் மற்றும் எழுதுபொருட்கள்	1,521,343.36	3,088,364.44
எரிபொருள்	423,000.00	878,477.24
செய்தித்தாள்	31,310.00	-
மொத்தம்	**1,975,653.36**	**3,966,841.68**

குறிப்பு 8	2024	2023
பராமரிப்பு	**ரூபா.**	**ரூபா.**
கணினி பராமரிப்பு	234,475.00	25,975.00
அலுவகல உபகரணங்கள் மற்றும் அலுவலக பராமரிப்பு	2,210,316.95	1,152,667.67
வாகன பராமரிப்பு	1,884,730.40	1,112,788.99
காற்று சீரமைப்பு உபகரண பராமரிப்பு	766,500.00	1,096,250.00
மொத்தம்	**5,096,022.35**	**3,387,681.66**

குறிப்பு 9	2024	2023
ஒப்பந்த சேவைகள்	**ரூபா.**	**ரூபா.**
கட்டிட வாடகை	3,750,000.00	3,750,000.00
தொலைபேசி	456,939.21	333,442.67
சுத்தம் செய்யும் செலவுகள்	1,641,080.83	909,735.23
மின்சாரம்	1,165,410.61	901,002.95
தண்ணீர்	93,071.68	94,096.99
முத்திரைகள் மற்றும் தபால் கட்டணங்கள்	834,395.00	667,240.00
சேவை ஒப்பந்தங்கள்	175,346.44	74,039.20
வைப்பு வரியுடன் (9.1)	639,940.60	876,697.53
மொத்தம்	**8,756,184.37**	**7,606,254.57**

குறிப்பு 10	2024	2023
தேய்மானம் (அட்டவணை 13.1)	**ரூபா.**	**ரூபா.**
இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்	688,718.54	810,602.82
தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்கள்	342,917.61	237,664.49
கணினிகள்	346,969.29	370,871.01
பெயர் பலகைகள் மற்றும் வேறு	670,413.20	706,926.58
மோட்டார் வாகனங்கள்	797,500.00	797,500.00
பிரிப்புச் சுவர்கள் மற்றும் கியூபிகல்கள்	1,229,611.92	1,229,611.92
மொத்தம்	**4,076,130.56**	**4,153,176.82**

குறிப்பு 11	2024	2023
பிற இயக்கச் செலவுகள்	**ரூபா.**	**ரூபா.**
விளம்பரம் மற்றும் விற்பனை ஊக்குவிப்பு	3,982,342.14	2,555,630.15
அலுவலக நலன்புரி	254,278.00	198,835.50
ஆளுகைச் சபையின் செலவுகள்	216,092.50	90,437.00
கணக்காய்வு குழு கூட்டம்	64,200.00	-
பொது கணக்காய்வு கட்டணம்	240,000.00	240,000.00
அகற்றலில் ஏற்படும் இழப்பு (11.1)	22,410.34	34,478.26
திறைசேரி கட்டணம்	-	2,315,712.33
இதர செலவுகள்	2,000.00	22,186.04
மொத்தம்	**4,781,322.98**	**5,457,279.28**

குறிப்பு 12	2024	2023
<u>நிகழ்ச்சித் திட்டங்கள்</u>	<u>ரூபா.</u>	<u>ரூபா.</u>
விரிவுரை கட்டணம்	7,760,325.00	6,343,872.50
புதுப்பித்தல்	6,723,793.40	3,285,223.82
பரீட்சை செலவுகள்	1,760,123.02	1,310,757.44
திட்டச் செலவுகள்	9,202,666.23	3,633,561.30
பயிற்சி மற்றும் மேம்பாடு	179,500.00	66,384.58
டிப்ளோமா விருது வழங்கும் விழா	4,959,061.68	1,618,569.69

குறிப்பு 13	2024	2023
<u>சொத்து, தொழிற்சாலை ரூ உபகரணங்கள் (13.1)</u>	<u>ரூபா.</u>	<u>ரூபா.</u>
இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்	3,964,992.24	4,416,352.50
தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்கள்	3,008,961.40	1,310,318.87
கணினிகள்	1,411,512.10	988,506.38
பெயர் பலகைகள் மற்றும் வேறு	461,988.52	1,132,401.72
மோட்டார் வாகனம்	5,816,287.67	6,613,787.66
பிருப்புச் சுசர்கள் மற்றும் கியூபிகல்ஸ்	8,718,662.68	9,948,274.60
மொத்தம்	**23,382,404.61**	**24,409,641.73**

குறிப்பு 14	2024	2023
<u>சரக்குகள் (14.1)</u>	<u>ரூபா.</u>	<u>ரூபா.</u>
அச்சிடுதல் மற்றும் எழுதுபொருட்கள்	1,346,004.42	587,763.15
அலுவலக உபகரணங்களின் பராமரிப்பு	120,065.00	12,822.50
மொத்தம்	**1,466,069.42**	**600,585.65**

குறிப்பு 15	2024	2023
<u>பெறத்தக்க வருமானம் (15.1)</u>	<u>ரூபா.</u>	<u>ரூபா.</u>
ஒரு நாள் நிகழ்ச்சிகள்	311,975.00	475,000.00
இரண்டு நாள் நிகழ்ச்சிகள்	100,000.00	400,000.00
மூன்று நாள் நிகழ்ச்சிகள்	180,000.00	-
சிறப்பு நிகழ்ச்சிகள்	87,500.00	-
டிப்ளோமா நிகழ்ச்சிகள்	4,691,000.00	2,388,838.00
சான்றிதழ் படிப்புகள்	1,075,500.00	473,500.00
பயிற்சி பட்டறைகள்	10,000.00	-
பயிற்சி	857,418.00	944,477.00
சுனிசி வேலைத் திட்டம்	-	311,530.00
உப மொத்தம் (15.1)	**7,313,393.00**	**4,993,345.00**
நிலையான வைப்பு வட்டி (21.e)	2,791,829.94	5,688,594.01
திரும்பப்பெறக்கூடிய வைப்புத்தொகை BMICH வழங்கும் விழா	317,768.28	
மொத்தம்	**10,422,991.22**	**10,681,939.01**

குறிப்பு 16	2024	2023
பணம் அல்லது பணத்திற்கு சமமானவை	ரூபா.	ரூபா.
இலங்கை வங்கி, நாரஹேன்பிட்டி, க.இ 0071451995	816,223.48	948,908.52
முத்திரை கையிருப்பு	26,380.00	49,900.00
மொத்தம்	**842,603.48**	**998,808.52**

குறிப்பு 17	2024	2023
முன்கூட்டியே பெறப்பட்டது	ரூபா.	ரூபா.
(பயிற்சித் திட்டம் 17.1)	6,777,500.00	2,629,000.00
பரீட்சை	-	619,512.00
மொத்தம்	**6,777,500.00**	**3,248,512.00**

குறிப்பு 18	2024	2023
திரட்டப்பட்ட செலவுகள்	ரூபா.	ரூபா.
மேலதிகநேர கொடுப்பனவு	195,173.99	40,738.46
பணியாளர்களின் பயணச் செலவுகள்	2,800.00	3,200.00
அலுவலக துப்பரவுகளுக்கான செலவுகள்	171,699.81	79,310.30
தொலைபேசி	42,389.22	69,923.93
பணியாளர் சம்பளம்	157,958.93	85,725.00
பயிற்சி பெறுபவர்களின் உதவித்தொகை	39,500.00	13,500.00
வேறு கொடுப்பனவுகள்	857,500.00	325,000.00
பொது கணக்காய்வு கட்டணம்	240,000.00	240,000.00
பரீட்சை செலவுகள்	383,807.50	52,645.00
மின்சாரம்	151,677.90	73,251.21
விரிவுரை கட்டணம்	662,187.50	67,050.00
விளம்பரம் மற்றும் விற்பனை ஊக்குவிப்பு	892,275.00	670,000.00
டிப்ளோமா விருது வழங்கும் விழா	1,261,620.00	-
விடுமுறை கட்டணம்	45,816.75	-
முத்திரை மற்றும் தபால் கட்டணம்	3,500.00	2,425.00
அலுவலக புதுப்பித்தல் கட்டங்கள் I & II தக்கவைப்பு 5%	450,584.21	450,584.21
திட்டச் செலவுகள்	251,261.00	250,000.00
தண்ணீர்	8,600.00	7,500.00
அலுவலக உபகரணங்கள் - டோனர்	-	25,645.00
திறைசேரி கட்டணம்	2,315,712.33	2,315,712.33
காற்றுசீரமைப்பு உபகரணம் மற்றும் வாகன பராமரிப்பு	200,210.51	-
எழுதுபொருள்	45,000.00	-
செய்தித்தாள்	3,420.00	-
கட்டிட வாடகை	625,000.00	-
புதுப்பித்தல்	48,235.00	-
பணியாளர் இடர் கடன்	500,000.00	-
டிப்ளோமா பணத்தைத் திரும்பப் பெறுதல்	12,000.00	-
மொத்தம்	**9,567,929.65**	**4,772,210.44**

குறிப்பு 19	2024	2023
முந்தைய ஆண்டுகளுக்கான சரிசெய்தல்கள்	ரூபா.	ரூபா.
திரட்டப்பட்ட செலவுகள் – மிகைஒதுக்கீடு	442,034.82	22,866.76
திரட்டப்பட்ட செலவுகள் – குறை ஒதுக்கீடு	(5,288.59)	(51,515.00)
பணத்தைத் திரும்பப் பெறுதல் - தி ஹாலோ டிரஸ்ட்	-	(40,000.00)
பணத்தைத் திரும்பப் பெறுதல் - துவான் அப்துல் ரஹ்மான்	-	(10,000.00)
பரீட்சை தொடர்பான பிழையான உள்ளீடு	619,512.00	-
	1,056,258.23	(78,648.24)
அகற்றுவதில் பிழை - 2022 ஆம் ஆண்டிற்கான மரச்சாமான்கள் மற்றும் பொருத்துதல்கள்	-	188,061.50
மொத்தம்	**1,056,258.23**	**109,413.26**

குறிப்பு: 20	2024	2023
பெறத்தக்க வருமானத்தைக் குறைத்தல்	ரூபா.	ரூபா.
பெறத்தக்க வருமானம் (குறிப்பு 15)	10,422,991.22	10,681,939.01
நிலையான வைப்புத்தொகை பெறத்தக்கவைகள் (குறிப்பு 21.e)	(2,791,829.94)	(5,688,594.01)
மொத்தம்	**7,631,161.28**	**4,993,345.00**

குறிப்பு 21
நிலையான வைப்புத் தொகைகள்

	(a)			(b)	(c)	(d)	(e)	f=(a+b+c-d)
நி.வை.	இருப்பு			புதிய முதலீடு	பெறப்பட்டது	நிறுத்தி வைத்தலுக்கனான வரி 5%	பெறத்தக்கது	31.12.2024 தினத்தில் இருப்பு நிலை
	31.12.2023	31.12.2023 தினத்தில் பெறத்தக்கது	01.01.2024					
2	19,001,016.50	424,789.85	19,425,806.35	-	1,194,721.45	80,975.57	418,669.23	20,539,552.23
10	5,502,206.95	300,284.83	5,802,491.78	-	279,165.96	28,972.54	197,945.83	6,052,685.20
11	2,656,125.00	345,660.10	3,001,785.10	-	160,386.29	25,302.32	193,368.64	3,136,869.07
12	6,715,776.28	731,927.62	7,447,703.90	-	480,224.00	60,607.58	404,897.57	7,867,320.32
13	1,887,479.41	205,709.40	2,093,188.81	-	134,967.70	17,033.86	113,797.09	2,211,122.65
14	6,687,705.66	728,868.30	7,416,573.96	-	478,216.76	60,354.25	403,205.18	7,834,436.47
17	21,078,834.81	545,739.70	21,624,574.51	-	1,884,967.58	121,535.36	521,424.40	23,388,006.73
18	3,176,875.00	71,022.74	3,247,897.74	-	199,751.45	13,538.71	69,999.40	3,434,110.48
19	11,454,556.53	197,708.78	11,652,265.31	-	1,014,905.09	60,630.69	155,250.40	12,606,539.71
20	1,403,772.07	12,307.04	1,416,079.11	-	129,223.95	7,076.55	9,798.29	1,538,226.51
21	5,650,034.43	49,534.55	5,699,568.98	-	520,112.75	28,482.37	39,437.09	6,191,199.36
22	5,507,835.61	1,430,000.00	6,937,835.61	-	550,780.37	99,430.80	-	7,389,185.18
23	3,000,000.00	645,041.10	3,645,041.10	-	74,958.90	36,000.00	264,036.82	3,684,000.00
	93,722,218.25	**5,688,594.01**	**99,410,812.26**	-	**7,102,382.25**	**639,940.60**	**2,791,829.94**	**105,873,253.92**
							9,894,212.19	

குறிப்பு : 22

ஓய்வூதிய சலுகை கடமை

01/01/2024 நிலவரப்படி இருப்பு	1,763,517.50
சேர்த்தல்: ஆண்டிற்கான ஒதுக்கீடு	976,987.50
	2,740,505.00
குறைவு:ஆண்டிற்கான கட்டணம் (எம்.ஐ.எ.ீ.ப். ஷர்மிளா)	167,335.00
31/12/2024 இற்கான இருப்பு	**2,573,170.00**

	ஆண்டுக்காண்டு கணக்கீடு 2023			ஆண்டுக்காண்டு கணக்கீடு 2024		
	சம்பளம் டிசெம்பர் - 2023	31/12/2023 நிலவரப்படி பூர்த்தி செய்யப்பட்ட ஆண்டுகளின் எண்ணிக்கை	31/12/2023 நிலவரப்படி ஒதுக்கீடு	சம்பளம் டிசெம்பர் 2024	31/12/2023 நிலவரப்படி பூர்த்தி செய்யப்பட்ட ஆண்டுகளின் எண்ணிக்கை	31/12/2024 நிலவரப்படி ஒதுக்கீடு
திருமதி.லாங்கிகா வீரசிங்க (13 வருடங்கள்)	76,635.00	12	459,810.00	105,545.00	13	686,042.50
திருமதி.டபிள்யு.கே.ஜே. தர்ஷிகா (8 வருடங்கள்)	37,810.00	7	132,335.00	53,110.00	8	212,440.00
திருமதி.எம்.ஐ.எவ். ஷர்மிளா (07 வருடங்கள்)	37,810.00	7	132,335.00			
திரு.ஜி.எஸ். லியனகே (08 வருடங்கள்)	35,980.00	7	125,930.00	51,250.00	8	205,000.00
திரு.பி.எம்.டி. சஞ்சீவ (08 வருடங்கள்)	34,300.00	7	120,050.00	49,550.00	8	198,200.00
திருமதி.கே.ஏ.டி.பி.என். கருணாரத்ன (07 வருடங்கள்)	55,705.00	7	194,967.50	72,980.00	8	291,920.00
திருமதி.எஸ்.எம்.டி.எம். ஆரியவன்ச (07 வருடங்கள்)	37,510.00	6	112,530.00	52,510.00	7	183,785.00
திரு.டபிள்யு.டபிள்யு.எச்.எஸ். ரணதுங்க (07 வருடங்கள்)	37,510.00	6	112,530.00	52,510.00	7	183,785.00
திருமதி.டபிள்யூ.எம்.கே.எச். வணிகசேகர (07 வருடங்கள்)	35,510.00	6	106,530.00	52,510.00	7	183,785.00
திருமதி.டபிள்யூ.டி.டி. வீரதுங்க (06 வருடங்கள்)	53,420.00	5	133,550.00	70,675.00	6	212,025.00
திரு.எஸ்.ஏ.டி.பிரியந்த குமார (05 வருடங்கள்)	66,475.00	4	132,950.00	86,475.00	5	216,187.50
செல்வி.ஏ.என்.எஸ்.ஆரம்பதி	-	-	-	50,710.00	-	-
செல்வி.எம்ஏ.பி.எம். முத்துக்குடா	-	-	-	50,710.00	-	-
செல்வி.கே.ஏ. புலசிங்க	-	-	-	50,710.00	-	-
செல்வி.என்.ஜி. ராஜபக்ஷ	-	-	-	50,710.00	-	-
திரு.வி.பி.ஆர்.எல். விதானபத்திரன	-	-	-	65,400.00	-	-
திருமதி.எஸ்.ஏ.கே.பி. காயந்தி	-	-	-	65,400.00	-	-
செல்வி.டி. நிரோஜனி	-	-	-	50,710.00	-	-
			1,763,517.50			**2,573,170.00**

3.4 நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

3.4.1 நிறுவன தகவல்

3.4.1.1 அடிப்படை அறிமுகம்

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம், தொழில் அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்ற ஒரு நியதிச்சட்ட அமைப்பாக்கும். தொழில் திணைக்களத்தின் ஊழியர் கல்வி துறையை மீள்கட்டமைக்கும்போது, தொழில் விடயபொறுப்பு அமைச்சின் கீழ் 2007 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தாபிக்கப்பட்ட இந்த நிறுவனம், 2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் வலுவூட்டப்பட்டதன் ஊடாக பாராளுமன்றத்தால் சட்டரீதியாக தாபிக்கப்பட்டது. இந்த சட்டத்தின்படி தொழில் தருநர்கள், தொழில்சார் சங்கங்கள், அரச அலுவலர்கள் ஆகியோரை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சேவை பெறுநர்கள் அடங்கலாக தொழில் துறையில் முத்தரப்பு பங்குதாரர்களின் பிரதிநிதியாளர்களைக் கொண்டமைந்த ஆளுகைச் சபையால் நிறுவனம் நிருவகிக்கப்படுகிறது. தற்போது, இந்த நிறுவனம் இரண்டாவது மாடி, தொழில் பொதுச் செயலகம், நாரஹேன்பிட்டி, கொழும்பு 05 என்ற முகவரியில் அமைந்துள்ளது.

3.4.1.2 முக்கிய செயல்பாடுகள் மற்றும் செயல்பாடுகளின் தன்மை

தேசிய தொழில் கற்கை நிறுவகத்தின் முக்கிய செயல்பாடுகளில் தொழிலாளர் சட்டம் மற்றும் தொழில்துறை உறவுகள் தொடர்பான பல்வேறு பயிற்சித் திட்டங்கள் மற்றும் பயிற்சி பட்டறைகளை நடத்துதல், பணியிட உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் மற்றும் வெளியீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வது ஆகியவை உள்ளடங்கும்.

3.4.1.3 நிறுவனத்தின் பதவியணி

2007 செப்தெம்பர் மாதம் தேசிய தொழில் கற்கைகள் நிறுவனத்தால் அதன் தொழில்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிக்கப்படினும், தேசிய தொழில் கற்கைகள் நிறுவனத்தின் பதவியணி அங்கீகரித்தல் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தப் பின்னணியில் தொழில் அமைச்சு மற்றும் தொழில் திணைக்களத்தால் நிறுவனத்திடம் தொழில்பாட்டு பதவியணி இணைக்கப்பட்டுள்ளதுடன், குறித்த அலுவலர்களின் சம்பளம் உரிய நிறுவனத்தால் செலுத்தப்பட்டுள்ளது. ஆகையால் இந்த நிதிக் கூற்றில் ஊழியர்களுக்கான வேதனம் மற்றும் சம்பளம், கொடுப்பனவுகள் தேசிய தொழில் கற்கை நிறுவனத்தில் மூலம் பணம் செலுத்தப்பட்டது. எனவே இந்த நிதிநிலை அறிக்கையில் பணியாளர்களுக்கு ஊதியங்கள், சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் தேசிய தொழில் கற்கைகள் நிறுவனம், தொழில் அமைச்சு மற்றும் தொழில் திணைக்களத்தால் செலுத்தப்படும். 2016 முதல், தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் வெற்றிகரமான செயல்பாட்டை உறுதி செய்வதற்காக ஊழியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும், 2023 ஆம் ஆண்டு முதல், சம்பளம் மற்றும் ஊதியங்கள் உட்பட நிறுவனத்தின் அனைத்து செலவுகளும் (மூலதனம் மற்றும் தொடர்ச்சியானவை), கருவூல ஒதுக்கீடுகளைப் பெறாமல் நிறுவனம் ஈட்டிய வருமானத்தில் இருந்து செலுத்தப்படுகின்றன.

3.4.1.4. தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் நிதி முகாமைத்துவம்

நிறுவனம் தொடங்கப்பட்டதிலிருந்து 2011 செப்டம்பர் 30 வரை நிறுவனத்தின் நிதி முகாமைத்துவம் தொழில் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (பதவியணி மற்றும் ஏனைய தடைகள் காரணமாக)

3.4.2. தயாரிக்கும் அடிப்படை

3.4.2.1 இணக்கப்பாட்டு பிரகடனம்

தேசிய தொழில் கற்கைகள் நிறுவனத்தின் நிதிக் கூற்றுகள், நிதி நிலை அறிக்கை தொடர்பான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, பங்கு மாற்றங்களின் அறிக்கை மற்றும் நிதிநிலை அறிக்கைக்கான குறிப்புகள் ஆகியவற்றைக் கொண்டமைந்துள்ளது. இலங்கையின் பட்டய கணக்காளர்கள் நிறுவகத்தால் விதிக்கப்பட்ட இலங்கையின் பொதுத்துறை கணக்கியல் தரநிலைகளுக்கு இணங்க இந்தக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

3.4.2.2 அளவீட்டு அடிப்படை

நிதி அறிக்கைகள் திரட்டிய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், நிதி அறிக்கைகளின் பணவீக்கத்துடன் தொடர்புடைய காரணங்கள் பொருட்டு எந்தவொரு மாற்றமும் செய்யப்படவில்லை. 3.4.2.3 தற்போதுள்ள வியாபாரங்கள்.

3.4.2.3 தற்போதுள்ள வியாபாரங்கள்

தற்போது காணப்படும் வியாபாரமாக பராமரிப்பதற்குள்ள ஆற்றல், தாபிக்கும் மதிப்பீடு பணிப்பாளர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அவர்களால் வியாபரத்தை கலைக்கவோ அல்லது நிறுத்தவோ கருதவில்லை.

3.4.2.4 ஒப்பீட்டு தகவல்

நிறுவனத்தால் கணக்கீட்டு கொள்கைகளை தொடர்ந்து இற்றைப்படுத்தி பயன்படுத்தியதுடன், அவை கடந்த ஆண்டில் பயன்படுத்தியவற்றுடன் பொருந்தவில்லை. நடப்பு (தற்போதைய) ஆண்டில் சமர்ப்பிப்பை உறுதிப்படுத்துவதற்கு தேவைப்படும் போது மட்டும் முந்தைய ஆண்டு தரவு தகவல் மற்றும் வெளியீடுகள் மீண்டும் தயாரிக்கப்பட்டு பயன்கடுத்தப்படுகிறது.

3.4.2.5 செயல்பாட்டு மற்றும் நாணயம்

தேசிய தொழில் கற்கை நிறுவனத்தின் செயல்பாட்டு நாணயம் ஆகிய இலங்கை ரூபாயில் இந்த நிதிநிலை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

3.4.2.6 கருத்தில் கொள்ள வேண்டிய கணக்கியல் கொள்கைகள்

கீழே கொடுக்கப்பட்டுள்ள கணக்கியல் கொள்கைகள் இந்த நிதிநிலை கூற்றுகளில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து காலப் பகுதிகளுக்கமைவாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

3.4.3 ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

சொத்துக்கள், அதன் எதிர்பார்க்கப்படும் பயன்பாடுகளுக்காக அவற்றை உபயோகப்படுத்தும் நிலைக்கு கொண்டு வரும்போது சில செலவுகளுடன் கையகப்படுத்தல் அல்லது கட்டுமான செலவு, ஆதனம், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் செலவுகள் ஆகும். செலவுகளின்போது, சொத்தாக அடிப்படையில் அடையாளம் காணப்பட்டதன் பின்னர், மறுமதிப்பீடு செய்யப்பட்ட சொத்துகளில் ஏதேனும் தேய்மானத்தைக் கழித்த பிறகு, மறுமதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியைகொண்டுச் செல்லப்படும். ஏனைய அனைத்து சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் திரட்டிய தேய்மானம் கழிக்கப்பட்டு செலவினம் குறிப்பிடப்படும். வித்தியாசமாகப் பயன்படுத்தக்கூடிய சில காலம் நீடிக்கும் முக்கியமான சாதனங்களிலிருந்து உபகரணங்கள் மற்றும் பொறித்தொகுதிகள் ஒரு தனி உருப்படியாக கொண்டுள்ளவிடத்து, குறித்த சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் பொறித்தொகுதிகள் பிரிதான உருப்படியாக கணக்கிடப்படும். ஒவ்வொரு நிதியாண்டின்

முடிவிலும் தேவைக்கேற்ப சொத்துக்களின் எஞ்சிய மதிப்பு, பயனுள்ள காலத்துக்கும் அதிகமாக செலவுகளை பதிவழிப்பதற்காக சொந்த காணிகளைப் பார்க்க அனைத்து ஆதனம், பொறித்தெகுதி மற்றும் உபகரணங்கள் மீது தேய்மானம் அறவிடப்படும். அகற்றப்பட்ட தேதி வரை சொத்து பயன்படுத்தப்படும் தேதிகளில் தேய்மானம் வழங்கப்படுகிறது. மேலும், இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலைகள் 7 SLPSAS 7 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களில் விபரங்கள் படி சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் செலவின முறைக்கு கணக்கிடப்பட்டுள்து. மேலும் பின்வருமாறு எளிய நேரியல் முறையில் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் தேய்மானம் கணக்கிடப்படுகிறது.

பயன்படுத்தப்படும் அடிப்படை வருடாந்திர விகிதங்கள் பின்வருமாறு.

3.5 வருடாந்திர விகிதங்கள்

	2024
இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்	10 ஆண்டுகள்
மர பொருட்கள் மற்றும் உபகரணங்கள்	13 ஆண்டுகள் (7.5%)
கணினிகள்	10 ஆண்டுகள்
பெயர்ப்பலகைகள் மற்றும் ஏனைய	00 ஆண்டுகள்
புத்தகங்கள்	05 ஆண்டுகள்
வாகனங்கள்	10 ஆண்டுகள்

02.10.2013 ஆம் திகதியில் மதிப்பீட்டு திணைக்களத்தால் சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான அறிக்கை 07.01.2014 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

3.5.1 பொருட் பதிவேடு (Inventory)

நிதியாண்டில் பயன்படுத்தப்பட்ட பொருட் பதிவேடுகளின் செலவில் வருமானம் மற்றும் செலவின வெளியீடுகளுக்காக அறவிடப்பட்டது.

3.5.2 பணம் மற்றும் சம மதிப்பு

பணம் மற்றும் பணத்திற்குச் சம மதிப்புகள், கையிருப்புகள் மற்றும் பொருட்கள் அடங்கும். (முத்திரைகள் உட்பட)

3.5.3 பொறுப்பு மற்றும் விதிகள்

கடந்த கால நிகழ்வுகளின் விளைவாக தற்போதைய கடமைகள் உள்ளவிடத்து ஐந்தொகையில் பொறுப்புகள் அடையாளம் காணப்படும். பொருளாதார நன்மைகளை உள்ளடக்கி வளங்களின் வெளியேற்றத்தை அதன்போது தீர்க்கப்படுவதனை எதிர்பார்க்கப்படுகிறது. கடனாளியின் வேண்டுகோளின் பேரில் அல்லது ஐந்தொகை திகதியில் ஆண்டுக்குள் செலுத்தப்பட வேண்டிய பொறுப்பாக கவனத்தில் கொள்ளப்படுவது, தற்கால பொறுப்புகளாக ஆகும். கடந்தகால நிகழ்வின் விளைவாக, நம்பத்தகுந்த வகையில் மதிப்பிடக்கூடிய தற்கால சட்டப்பூர்வ அல்லது அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பாக தேசிய தொழில் கற்கைகள் நிறுவனத்திற்கு இருந்தால், ஒதுக்கீடுகள் அடையாளம் காணப்படுவதுடன் கடமைகளை தீர்ப்பதற்காக பொருளாதாரப் பலன்கள் வெளியேறுவது அவசியம் என்பதைத் தீர்மானிக்க முடியும்.

3.5.4 வருமானம் அடையாளம் காணுதல்

பொருட்கள் வழங்கப்பட்டு ஒப்படைத்துள்ள சந்தர்ப்பத்தில் பொருட்கள் / சேவைகளின் விற்பனை மூலம் வருமானம் அடையாளம் காணப்படும். கவனத்தில் கொள்ளப்படும் கிடைக்கப்பெறுவனவைகள் மற்றும் கிடைப்பதற்கு முடியுமான நியாயமான பெறுமதிகள், இலங்கை அரசின் சார்பில் சேகரிக்கப்பட்ட வரி தொடர்பான கழிப்புகள் மற்றும் விற்பனையின் மொத்த வருமானமாக குறிக்கப்படுகிறது.

வருமான அடிப்படைகள்

கற்கைநெறிகளில் பங்கேற்பாளர்களுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளும்போது, திரட்டிய அடிப்படையின் மீது வருமானம் கணக்கிடப்படுகிறது. தவிர்க்க முடியாத காரணங்களால் சில பங்கேற்பாளர்களால் நிர்ணயிக்கப்பட்ட காலம் முடிவதற்கு முன் கற்கை கற்கைநெறியை கைவிடப்படுவதுடன், பல்வேறு காரணங்களால் சில கற்கைநெறி கட்டணங்களை அறவிட இயலாது. இந்த கிடைக்கப்பெறுவனவைகள் வருமானமாக கருதப்படுவதில்லை. இருப்பினும், இதுபோன்ற சந்தர்ப்பங்களில் முடிந்தால் நிலுவைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். கற்கைநெறியின் மொத்த வருமானம் கற்கைநெறியின் ஆண்டிற்காக தீர்மானிக்கப்படுகிறது.

3.5.6 கிடைக்கப் பெறுவனவைகள்

எதிர்மறை மற்றும் சந்தேகத்திற்குரிய கிடைக்கப்பெறுவனவைகளுக்காக மொத்த கொடுப்பனவுகளைப் புரிந்துக் கொள்வதற்கு மதிப்பிடப்பட்டுள்ளதாக வியாபார கிடைக்கப்பெறுவனவைகள் குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட தரப்புகளிடமிருந்து வேறு கிடைக்கப்பெறுவனவைகள் மற்றும் அறவிடுகள் மோசமான மற்றும் சந்தேகத்திற்குரிய கிடைக்கப்பெறுவனவைகளுக்கான கொடுப்னவுகள் செலவிலிருந்து கழிக்கப்படுகின்றன.

3.5.7 வரையறுக்கப்பட்ட உதவுதொகை திட்டங்கள்

வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் என்பது, ஒரு தனி பிரிவுக்கு நிலையான உதவுதொகை செலுத்தும் பிரிவின் கீழ் ஒரு பிந்தைய வேலைவாய்ப்பு நன்மை திட்டமாகும். அதிக கட்டணம் செலுத்துவதற்காக சட்டப்பூர்வ அல்லது மறைமுகமான பொறுப்பு எதுவும் இல்லை. ஒவ்வொரு பணியாளர்களையும் உள்ளடக்கும் சேமலாப நிதிக்கு உதவுதொகை செலுத்துவதில் ஏற்படும், இழப்புகள் அல்லது ஆதாயங்கள் செலவுகளாக அடையாளம் காணப்படும். சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதியமாக ஊழியர்களின் மொத்த ஊதியத்தில் முறையே 12% மற்றும் 3% வீதங்களை நிறுவனம் செலுத்துகிறது.

3.5.8 காசுப் பாய்ச்சல் அறிக்கை

இலங்கை கணக்கியல் தரநிலைகளின்படி, SLPSAS 7 காசுப் பாய்ச்சல் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

04 நான்காம் அத்தியாயம்

கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No.

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date

தலைவர்

தேசிய தொழில் கற்கை நிறுவனம்

தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் 2024 டிசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை.

மேற்படி அறிக்கை இத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஜீ.எச்.டி.தர்மபால

கணக்காய்வாளர் அதிபதி (ப.க)

பிரதி:- செயலாளர் - தொழில் அமைச்சு

செயலாளர் - நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார சு

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No. CAF/C/SFC/01/2019/01/20

මබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 19 September 2023

LSW/B/NILS/SR/01/2024

தலைவர்,

தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம்

தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் 2024 டிசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை.

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய தொழில் கற்கை நிறுவனத்தின் 2024 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, போதியளவிலான கணக்கீட்டு கொள்கைகளுக்கு ஏற்புடையதான தகவல்களும் உள்ளடக்கிய நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகளைக் கொண்டமைந்துள்ள 2024 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. அரசியலமைப்பில் 154 (6) உறுப்புரை பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிரந்து, நிறுவனத்தின் நிதிக் கூற்றுகள் ஊடாக 2024 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 <u>முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை</u>

(அ) இலங்கை அரசு துறை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க இலக்கம் 1 இல் 55 ஆவது பந்தி பிரகாரம் நிதிக் கூற்றுகளின் உறுப்படிகளை சமர்ப்பித்தல் அல்லது வகைப்படுத்தல் திருத்தம் செய்தவுடன் நடைமுறையற்றதாயின், ஒப்பீட்டு பெறுமதிகள் மீண்டும் வகைப்படுத்தல் வேண்டுமென்பதுடன், வகைப்படுத்தலின் இயல்பு, காரணம், உருப்படி மற்றும் உறுப்படி வகுப்பின் பெறுமதி வெளிப்படுத்த வேண்டும். ஆயினும் அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) 2024 ஆம் ஆண்டில் காசுப் பாய்ச்சல் கூற்றில் பணம் வருதல் அல்லது செல்லுதல் இன்றி ரூபா.1,056,258 ஆன கடந்த ஆண்டு சீராக்கல் அவதானிக்கப்பட்டது.

இலங்கைக் கணக்காய்வுத் தராதரங்களுக்கிணங்க (இ.க.த) என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வுத் தராதரங்களுக்கிணங்க எனது பொறுப்புக்கள் இவ்வறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின்பொறுப்புக்கள் எனும் பகுதியில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. எனது கணக்காய்வுக்குத் தகுதி பெறுதல் அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றினை வழங்குவதனை நோக்காகக் கொண்டு, பெறப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவையாகவும் பொருத்தமானவையாகவும் உள்ளன என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 <u>நிறுவகத்தின் 2023 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்</u>

இக்கணக்காய்வு அறிக்கைத் தேதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட நிறுவனத்தின் 2024 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆனால், நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள் ஏனைய தகவல்களெனப் பொருள்படும். இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பேற்க வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துக்களில், ஏனைய தகவல்களை உள்ளடக்காததுடன் நான் அது தொடர்பாக எந்தவிதமான உறுதிப்படுத்தலையோ கருத்தினையே வெளியிடவில்லை.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கணக்காய்வு தொடர்பில், எனது பொறுப்பாவது மேற்படி அடையாளங் காணப்பட்ட தகவல்களை வாசிப்பதுடன் அவ்வாறு செய்யும் போது, ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்கள் அல்லது கணக்காய்வு மூலமாக அல்லது வேறு விதமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட எனது அறிவின்படி போதியளவு பொருத்தவில்லையா என்பதைக் கவனத்திற்கொள்வதாகும்.

நிறுவகத்தின் 2024 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையை வாசிக்கும் போது, அதில் போதுமான அளவிலான தவறுகள் உள்ளதாக நான் தீர்மானித்தால் செய்தால், செவ்வைப்படுத்துவதற்காக நிருவகிக்கப்படும் தரப்புகளிடம் குறித்த விடயங்களை நான் அறிக்கையிடுதல் வேண்டும். இது தொடர்பில் நான் அறிக்கையிடுவதற்கு எதுவுமில்லை.

1.4 <u>நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் நிருவகிக்கும் தரப்பினரது பொறுப்புக்கள்</u>

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள்

இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள்

நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கும் தரப்புகளை தொடர்புகொள்கின்றேன்.

2. ஏனைய சட்டத்துடனான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஒதுக்கீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைவாக, கணக்காய்விற்கு தேவையான எல்லா தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், எனது பரிசோதனையில் அறிய வருகின்ற வகையில் உரிய நிதி அறிக்கைகள் நிறுவனம் பேணிச் சென்றிருந்தது.

2.1.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில 6 (1) (ஈ) (III) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி நிறுவனத்தின் நிதிக் கூற்றுகள் கடந்த ஆண்டுடன் ஒத்துள்ளது.

2.1.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 கடைபிடிக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிகள் மீதும் அளவு ரீதியிலான விடயங்களுக்கு வரையறைக்குட்படுத்தியதால், பின்வரும் வெளிப்படுதல்களை மேற்கொள்வதற்கான எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டுச் சபையின் எவரேனுமொரு உறுப்பினர் பல்கலைக்கழகத்துடன் தொடர்பு கொண்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பொதுவான வணிகப் போக்கிற்கு தொடர்புள்ளது என்பது தொடர்பாக,

(அ)	2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 40 (1) உப பிரிவு	கணக்கு கொடுக்கும் அலுவலரால் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை கணக்காய்வு செய்வதற்காக பொருத்தமான கணக்காய்வாளர் ஒருவரை நியமனம் செய்தல் வேண்டுமாயினும், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளக கணக்காய்வாளர் பதவி இருக்கையில் அதற்கு தேவையான அலுவலரை ஆட்சேர்ப்புச் செய்யாமை காரணமாக உள்ளக கணக்காய்வின் கடமைப் பொறுப்புகள் நிறைவேற்றப் படவில்லை.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி கோ வை 371	நிதி ஒழுங்கு விதிக்கு அப்பாற்பட்டு முற்பணம் வழங்கப்பட்டிருந்த திட்டங்களின் பொருட்டான உபசரிப்பு அலுவல்கள் அடங்கலான செலவினங்களை மேற்கொள்ளும் போது முறையான உள்ளக கட்டுப்பாட்டு முறைகளை நடைமுறைப்படுத்தியிருக்கவில்லை.
(இ)	2021 நவம்பர் 16 ஆம் திகதி இலக்கம் 01/2001 ஆம் இலக்க அரச தொழில்முயற்சி சுற்றுநிருபத்தின் 4.2 ஆவது பந்தி	ஆகக்குறைந்தது காலாண்டுக்கு ஒன்று என்ற வகையில் ஓராண்டுக்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் நான்கினை நடாத்தப்படுதல் வேண்டுமாயினும், மீளாய்விற்கான ஆண்டில் ஒரு கூட்டம் மட்டும் நடாத்தப்பட்டிருந்தது.

2.2.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகாத வகையில் செயலாற்றப்பட்டுள்ளது என்பது தொடர்பாக

தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகள்	இணங்கியொழுகாமை
2010 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தேசிய தொழிற் கற்கை சட்டம் (i) 3 (ஈ) உபபிரிவு	நூலகம் மற்றும் தகவல் வழங்கும் சேவை தாபித்தல் மற்றும் அவற்றை பராமரித்தல் மேற்கொள்ள வேண்டுமாயினும், 2025 ஆம் ஆண்டு மார்ச் வரை அத்தகைய தகவல்களை வழங்கும் சேவைகளை நடைமுறைப்படுத்தவில்லை என்பதுடன், இணையதளம் மீள் நிருமாணிக்கும் பணிகளும் முடிவுறுத்தப்படவில்லை.

(ii)	3 (உ) பிரிவு	இணையான நோக்கங்களுடனான தேசிய மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் சங்கம் மற்றும் அமைப்புகளுடன் நெருங்கிய ஒத்துழைப்புடன் செயற்படுதல் வேண்டுமாயினும், புரிந்துணர்வு உடன்படிக்கை ஒப்பமிடும் பணிகள் முடிவுறுத்தப்படவில்லை.
(iii)	16 (1) பிரிவு	பணிகளை நிறைவேற்றப்பட வேண்டிய தொழில்நுட்ப குழுக்கள் ஏதேனும் எண்ணிக்கையினை சபையால் நியமிக்க முடியுமாயினும், நிறுவனம் தாபிக்கப்பட்டு 24 ஆண்டுகளுக்கு அதிகமாகியிருப்பினும், அத்தகைய குழுக்களை நியமிக்கும் ஆற்றல் மேம்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த, நிறுவன வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் மற்றும் பயனுள்ள விதத்திலும் உரிய காலவெல்லையினுள் குறித்த சட்டதிட்டங்களுக்கமைவாக, கொள்வனவு செய்து பயன்படுத்தப்படாமை.

மீளாய்விற்கான ஆண்டில் டிசெம்பர் மாதம் நடாத்தப்பட்ட டிப்ளோமா அளிப்பு விழாவில் மதிப்பிடப்பட்ட வருமானம், செலவினம் மற்றும் உண்மையான வருமானம் மற்றும் செலவினம் என்பவற்றுக்கிடையில் கவனிக்கத்தக்க ஏற்றத்தாழ்வுகள் காணப்பட்டதுடன், மதிப்பீடுகள் தயாரித்தல் சரியான கட்டுப்பாட்டு முறைமையின் கீழ் நடைபெறவில்லை

2.3 <u>ஏனைய விடயங்கள்</u>

கற்கைநெறிகளை நடைமுறைப்படுத்தும் போது, பயிற்சி பிரிவால் வருமானம் மற்றும் செலவின மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டுமாயினும், மதிப்பிடப்பட்ட செலவினம் மற்றும் உண்மையான செலவினம் என்பவற்றை ஒப்பிடப்படாமை காரணமாக செலவினம் அல்லது இலாபம் தொடர்பான கற்கை மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன், 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டில் வருமானம் 16% ஆல் அதிகரித்திருப்பினும், அதனுடன் ஒப்பிடுகையில் கற்கைநெறி நடாத்தும் செலவினம் பொருட்டு செலவினம் 88% ஆல் அதிகரித்திருந்தது.

ஜி.எச்.டி. தர்மபால
கணக்காய்வுத் தலைமை அலுவலர்

தேசிய தொழிற் கற்கைகள் நிறுவனம்

கணக்காய்வுக் குழு அறிக்கை

தேசிய தேசிய தொழில் கற்கைகள் நிறுவனத்தின் கணக்காய்வுக் குழுவானது ஆளுகைச் சபை உறுப்பினர்கள் மூவரைக் கொண்டதாகவும், திறைசேரியின் பிரதிநிதி அதன் தலைவராகவும் செயற்பட்டார். மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில், இரண்டு உள்ளகக் கணக்காய்வு கூட்டங்கள் நடாத்தப்பட்டன, அதில் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் அழைப்பாளராக செயல்பட்டார்.

நிறுவனத்தில் பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை மற்றும் நல்லாட்சி ஆகியவற்றை வலுப்படுத்துவதற்கு கணக்காய்வுக் குழுவிடம் பணிக்கப்படும். அதன் செயற்பாடுகளின் நோக்கம் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

அ) உள்ளகக் கணக்காய்வு பிரிவின் பொறுப்புகளைத் தீர்மானித்தல் மற்றும் வருடாந்த கணக்காய்வு திட்டங்களை மீளாய்வு செய்தல்.

ஆ) நிறுவனத்தின் அனைத்துச் செயற்பாடுகளுக்குமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை மீளாய்வு செய்து மதிப்பீடு செய்தல்.

இ) செலவுத் திறன் மற்றும் வீண் விரயச் செலவுகள் போன்றவற்றை ஒழிப்பதற்காக ஒழுங்குபடுத்தப்பட்ட கால இடைவெளிகளில் செயற்திறனை மீளாய்வு செய்தல்.

ஈ) வெளியக கணக்காய்வாளர்களுடன் ஒருங்கிணைத்தல் மற்றும் தலைமை கணக்காய்வாளரின்/வெளியக கணக்காய்வாளர்களின் முகாமைத்துவக் கடிதங்கள் தொடர்பான தொடர் நடவடிக்கை எடுத்தல்.

உ) சாசனங்கள், ஒழுங்குவிதிகள், விதிகள் மற்றும் சுற்றுநிருபங்களுக்கு அமைவானதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளல்.

ஊ) கணக்கீட்டுத் தரங்களுக்கான இணக்கத்தை உறுதிப்படுத்த நிதிநிலை அறிக்கைகளை மீளாய்வு செய்தல்.

எ) திருத்த நடவடிக்கைகளுக்காக உள்ளக/வெளியக கணக்காய்வு அறிக்கைகள், முகாமைத்துவக் கடிதங்கள் என்பன மீளாய்வு செய்தல்.

ஏ) பொது தொழில்முயற்சிகள் பற்றிய செயற்குழுவின் பரிந்துரைகள்/கட்டளைகள் நடைமுறைப்படுத்-துவதை மீளாய்வு செய்தல்.

ஐ) வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்படுவதற்கு குழுவினால் கண்டறியப்பட்ட விடயங்கள் தொடர்பான அறிக்கையொன்றைத் தயாரித்தல்.

2024 ஆம் ஆண்டின் கணக்காய்வுக் குழுவின் அமைப்பு

கணக்காய்வுக் குழுவானது முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் மூவரைக் கொண்டிருந்ததுடன், அதன் அமைப்பு பின்வருமாறு ஆகும்.

2024.01.10 அன்று நடைபெற்ற கணக்காய்வுக் குழுக் கூட்டம்

திரு.எஸ். பீ.என். பி. என். அபேசேகர - தலைவர் (திறைசேரி பிரதிநிதி)
திருமதி இனோகா த அல்விஸ் - முகாமைத்துவ சபை உறுப்பினர்
திரு.ஆர். டி. சமிந்த - முகாமைத்துவ சபை உறுப்பினர்

2024.05.10 அன்று நடைபெற்ற கணக்காய்வுக் குழுக் கூட்டம்

திரு.எஸ். பி. என். பி. என். அபேசேகர - தலைவர் (திறைசேரிப் பிரதிநிதி)
திருமதி சமங்கிகா அபேசிங்க - ஆளுகைச் சபை உறுப்பினர்
திரு.ஆர். டி. சமிந்த - ஆளுகைச் சபை உறுப்பினர்

கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் அவதானிப்பாளராக பிரதிக் கணக்காய்வு அதிபதி திணைக்களத்தின அலுவலராக கலந்துகொண்டார். பணிப்பாளர் நாயகம், கணக்காளர், உதவிப் பணிப்பாளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோர் அழைப்பின் பேரில் கூட்டங்களில் கலந்துகொண்டனர்.

வருமானம்

நிறுவனத்தின் மொத்த வருமானம் 2024 ஆம் ஆண்டிற்கு ரூபா 78 மில்லியன் ஆகும். இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 16% அதிகரிப்பைக் குறிக்கிறது (2023 - ரூபா 67 மில்லியன்). வருமானத்தின் விரிவான அமைப்பு நிதிநிலை அறிக்கைகளின் குறிப்பு 4 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

வருமானம் அதிகரித்தமைக்கு முக்கிய காரணமாக குறுகிய கால பயிற்சித் திட்டங்களின் வளர்ச்சி அமைந்தது. பயிற்சி நடவடிக்கைகள் ரூபா 62 மில்லியனை உருவாக்கி, தொடர்ந்து பிரதான வருமான மூலமாக இருந்தது. பரீட்சைகள் நடாத்துவதன் மூலம் ரூபா 6 மில்லியனையும், நிலையான வைப்புகளிலிருந்து கிடைத்த வட்டி ரூபா 10 மில்லியனையும் பங்களித்தது.

ஒப்பந்தங்களில் பணிப்பாளர்கள் கடப்பாடுகள்

மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் நிறுவனத்துடன் ஒப்பந்தங்களில் நேரடி அல்லது மறைமுக கடப்பாடுகள் எதுவும் இருக்கவில்லை என பணிப்பாளர்கள் உறுதிப்படுத்தினர்.

சேவை நியமனம்

ஆட்சேர்ப்பு, பயிற்சி, பதவி உயர்வு மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் உட்பட அதன் அனைத்து நடவடிக்கைகளிலும், நிறுவனம் சமவாய்ப்பு கொள்கையைப் பின்பற்றுகிறது. பாலினம், இனம், மதம், திருமண நிலை, அரசியல் கருத்து அல்லது உடல் பண்புகள் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் அனைத்து ஊழியர்களுக்கும் சம வாய்ப்பு உறுதி செய்யப்படுகிறது. அதன் சேவை நியமன நடைமுறைகளில் நியாயத்தன்மையையும் உள்ளடங்கலையும் உறுதிப்படுத்த நிறுவனம் கடமைப்பட்டுள்ளது.

சட்டரீதியான கொடுப்பனவுகள்

தமது உச்ச அறிவுக்கு அமைய, நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டிய அனைத்து வரிகள் மற்றும் தீர்வைகள், நிறுவன ஊழியர்களுக்காகவும் அவர்களுக்குத் தொடர்பானவையாகவும் செலுத்தப்பட வேண்டிய அனைத்துப் பங்களிப்புகள் மற்றும் வரிகள், ஐந்தொகை திகதியில் அல்லது பொருத்தமானபோது ஏற்பாடுகள் செய்யப்பட்டவாறு நிறுவனத்தினால் செலுத்தப்படவுள்ள மற்றும் செலுத்தப்பட வேண்டிய ஏனைய அனைத்துச் சட்டரீதியான கொடுப்பனவுகளையும் செலுத்தியுள்ளதாக பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

கணக்காய்வாளர்கள்

2024 ஆம் ஆண்டுக்கான கணக்குகள் தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன. நிதிநிலை அறிக்கைகள் பற்றிய கணக்காய்வு கருத்து பக்கம் 40 இல் வழங்கப்பட்டுள்ளது.

முடிவுரை

இலங்கை அரச துறை கணக்கீட்டுத் தரங்களுக்கு (SLPSAS) இணங்க, நிறுவனத்தின் நிதியியல் அறிக்கையிடல் வெளிப்படையானது என்பதிலும், நிறுவனத்தின் நிதிச் செயலாற்றுகை மற்றும் நிதியியல் நிலைமை பற்றி உண்மையான மற்றும் நியாயமான கருத்தை அளிக்கிறது என்பதிலும் கணக்காய்வுக் குழு திருப்தி அடைகிறது. மேலும், நிறுவப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டுக் கட்டமைப்பு மற்றும் இடர் முகாமைத்துவ முறைமைகள் போதுமானதாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் உள்ளதென்பது குழுவின் கருத்தாகும்.